**கவனிக்க**.- 2016.09.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1986 - 2016 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.09.23

*1986 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1732 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1742 |


**கவனிக்க**.- ரஜித கொடிதுவக்கு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | மெதகும்புற | தெல்தெனிய பிரதேசத்தின் மெதகும்புற பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

9-741

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 29.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | கரந்தெனிய | காலி மாவட்டப் பிரிவின் கரந்தெனிய பனாபிட்டிய பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

9-742

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | லுணுகல | ஒயபலாத கிழக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வியலுவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |
| பதுளை | பசறை | ஒயபலாத மேற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வியலுவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

9-789

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

### இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் வகுப்பு I தரம் I இலுள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவி

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் மேற்குறித்த பதவியிலுள்ள 2 வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ''கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம், இல. 306/ 72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு 2016, ஒற்றோபர் 22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை தாங்கிவரும் அஞ்சலுறையின் மேற்பக்க இடது பக்க மேல் மூலையில் 'பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவி' எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தாமதமாகிவிட்டது அல்லது தவறிவிட்டது என்ற முறையீடெதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசித் திகதி வரை தங்கள் விண்ணப்பங்களை அனுப்பாது தாமதம் செய்யும் விண்ணப்பகாரர் அதனால் நேரும் விளைவுகளிற்கு பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள இலங்கை விண்ணப்பதாரிகள், அவர்கள் விரும்பும் பட்சத்தில் விண்ணப்பங்களைக் குறித்த கால எல்லையினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அந்த நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

(iii) *வைத்தியப் பரிசோதனையும் பயணக் கட்டணங்களும்.*- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் பதவிக்காக நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இப்பதவிக்காக தெரிவு செய்யப்படும் இலங்கையரான பரீட்சார்த்திகள், சேவையாற்றுவதற்கான உடல்நலத்தைப் பெற்றுள்ளாரா என்பதை ஆய்ந்தறியுமுகமாக அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர் ஒருவர் முன்னிலையில் பரிசோதனைக்காக சமுகமளித்தல் வேண்டும். அத்தகைய வைத்தியப் பரிசோதனைக்கான கட்டணங்களும் அத்துடன் இலங்கைக்கு வருவதற்கான பயணச் செலவுகளும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

2. **பதவியில் அமர்த்தப்படுவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரியதுமாகும். நீங்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து உங்களது மாதாந்த உழைப்பின் ஏழு சதவீதத்தை (7%) விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துமாறு பணிக்கப்படுவீர்கள்.

(ii) தற்போது அரச சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவியில் இருப்பவராக இருந்தால் தற்போதைய அப்பதவியின் ஓய்வூதிய நிபந்தனைகள் தொடர்ந்தும் செல்லுபடியாகும்.

3. **சம்பளமும் படிகளும்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் I ஆம் பட்டோலையின் பிரகாரம் இப்பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 ஆகும். (SL-1-2016) இப்பதவிக்குரிய சம்பளப் படிநிலை ரூபா 80,515 ஆகும்.

இருப்பினும், அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் II ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே உங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படும்.

**குறிப்பு**.- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரது தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து, தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் வினவிய பின்னர் மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான கட்டத்தில் அமர்த்தப்படுவர்.

4. **ஆட்சேர்ப்பு முறை**.- கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரையின் பேரில் பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிலிருந்து இந்தப் பதவிக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும்.

இக்குழுவின் ஏனைய இரு அங்கத்தவர்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சின் பேரில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர்.

5. **தேவையான தகைமைகள்.-** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு திருப்திகரமான சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பதாரர் இலங்கையராக இருத்தல் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும் தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் ;

(இ) (i) இலங்கையின் அல்லது இங்கிலாந்தின் மற்றும் வேல்சின் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தில் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்கறிஞர் நிறுவனத்தில் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபெற்ற கணக்கறிஞர் சங்கத்தில் அல்லது சமமான உயர்தொழில் நிறுவனத்தில் ஒரு துணைநிலை உறுப்பினராக இருத்தல் ;

(ii) அவ்வாறான தொழிற்தகைமை பெற்ற பின்னர் குறைந்தது 8 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். எனினும்,

(i) அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபன சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் பதவியினர் தரத்தில் 8 ஆண்டு அனுபவமுடையவராக இருக்குமிடத்து, தகைமை பெற்ற பின்னரான அனுபவம் 4 ஆண்டுகளாக குறைக்கப்படும்.

(ii) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் இலங்கைக் கணக்காய்வுச் சேவையில் 8 ஆண்டுகள் சேவைக் காலத்தைக் கொண்டுள்ள இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் அங்கத்தவர்கள் விடயத்தில் தகைமை பெற்ற பின்னரான அனுபவம் தேவைப்படமாட்டாது.

(இந்த நோக்கத்தின் பொருட்டு சேவைக் காலத்தை கணிப்பிடுகையில் முழுச் சம்பளத்துடனான, அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற கற்கை விடுமுறைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ஈ) 2016, ஒற்றோபர் 22 ஆந் திகதியன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபன சேவையில் பதவிகளை வகிப்போருக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.)

6. **கோரப்படும்போது பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது முழுவதையுமோ விண்ணப்பதாரர் சமர்ப்பித்தல் வேண்டும் :-**

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(**கவனிக்க.-** ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணக் கோவையின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) கல்விசார், தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைச் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமையை பெற்ற பின்னருள்ள அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் ;

(ஈ) அண்மையில் பெறப்பட்ட இரு நல்லொழுக்கச் சான்றிதழ்கள். (இது, தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபன சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது)

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைக்கான சான்றிதழ்கள்.

**குறிப்பு** :

(i) விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ இணைக்கப்படக் கூடாது.

(ii) கோரப்படுமிடத்து ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் குறித்து கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினால் அவர்களது விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களின் ஊடாக உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எனக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இந்த அலுவலகத்தின் எந்த ஒரு உத்தியோகத்தரினதும் தனிப்பட்ட பெயருக்கு அனுப்பி வைக்கப்படுதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுடன் தொடர்புடைய பொது நிபந்தனைகள் இந்தப் பதவியின் ஆட்சேர்ப்புக்கும் ஏற்புடையதாகும்.

9. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும். இவ்விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றிய அறிவித்தல் கிடைக்காதுவிடின் எனக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

எச். எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

306/72, பொல்துூவ வீதி, பத்தரமுல்லை,
2016, செப்தெம்பர் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் வகுப்பு I தரம் I இலுள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவி**

இலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முழுப் பெயர் :----.
(தெளிவான எழுத்தில் குடும்பப் பெயராக உள்ள இறுதிப் பெயரின் கீழ் கீறிடுக)

2. அஞ்சல் முகவரி :----.

3. (அ) பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

(ஆ) 2016, ஒற்றோபர் 22 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

4. இனம் :
(அ) இலங்கைப் பிரசையா ? :----.

(ஆ) இலங்கைப் பிரசையாயின் பின்வருவோர் பிறந்த இடத்தைக் குறிப்பிடுக :-

(i) விண்ணப்பதாரர் :----.
(ii) விண்ணப்பதாரரின் தந்தை :----.
(iii) விண்ணப்பதாரரின் தந்தையின் தந்தை :----.

5. கல்வித் தகைமைகள் :

| பரீட்சை/ பட்டம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| | | |

6. தொழில்சார் தகைமைகள் :

| விபரம் | தகைமைகளைப் பெற்றுக் கொண்ட திகதிகள் |
|---|---|
| | |

7. தற்போதைய பதவியின் விபரம் :

(அ) பதவி :----.

(ஆ) திணைக்களம்/ நிறுவனம் :----.

(இ) நியமனத் திகதி :----.

(ஈ) நியமனம் நிரந்தரமானதா, ஓய்வூதியத்திற்குரித்தானதா, தற்காலிகமானதா, ஒப்பந்த அடிப்படையிலானதா ? :----.

(உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :----.

(ஊ) வருடாந்த சம்பள அளவுத் திட்டம் :----.

(எ) தற்போதைய ஆண்டுச் சம்பளம் :----.

8. தொழில்சார் தகைமை பெறப்பட்ட திகதி வரை வகித்த பதவி நிலைத் தொழில்கள் தொடர்பான விபரங்கள் :

| பதவியும் கடமைகளின் தன்மையும் | திணைக்களம்/ நிறுவனம் | முதல் | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |

9. தொழில்சார் தகைமைகள் பெற்ற பின்னர் வகித்த தொழில் விபரங்கள் :

| பதவியும் கடமைகளின் தன்மையும் | திணைக்களம்/ நிறுவனம் | முதல் | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை :

சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

11. உங்களைப் பற்றி விசாரித்து அறிந்துகொள்ளக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரிகளைக் குறிப்பிடுக :

(i) ----.
(ii) ----.

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித இழப்பீடுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

(தற்போது அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத்தாபன சேவையிலுள்ள விண்ணப்பதாரருக்கு மட்டும்)

திரு./திருமதி/ செல்வி ............................................ இன் விண்ணப்பம் இத்துடன் அனுப்பப்படுகின்றது. அவர் ................ ஆந் திகதியிலிருந்து இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமய/ ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஊழியராக வேலை செய்கிறார் என்று இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அவர் சம்பந்தப்பட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/ முடியாது என்றும் அறியத் தருகின்றேன்.

அமைச்சுச் செயலாளரின்/
திணைக்களத் தலைவரின்/
கூட்டுத்தாபனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
பதவிப் பெயர் :----.
நிறுவனம் :----.

**இலங்கை கணக்காய்வு சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் 3.1(அ) பந்தியின் பிரகாரம் இலங்கைக் கணக்காய்வு சேவையின் வகுப்பு I தரம் I இலுள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான புள்ளி வழங்கும் திட்டம்**

1. **மேலதிக கல்வி தகைமை :** ஆகக்கூடிய புள்ளிகள் 25

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படை தகைமைகளிற்கு மேலதிகமாக காணப்படும் கணக்கீட்டு அல்லது கணக்காய்வுத் துறையில் முழுமையான தொழில்சார் தகைமைக்காக (ஒரு தொழில்சார் தகைமைக்காக 05 புள்ளிகள் வீதம்) | 10 புள்ளிகள் |
| (ஆ) | மேற்குறிப்பிட்ட துறைகளிற்கு மேலதிகமாகவுள்ள ஏனைய துறைகள் அல்லது சட்டத் துறையின் தொழில்சார் தகைமைக்காக (ஒரு தொழில்சார் தகைமைக்காக 05 புள்ளிகள் வீதம்) | 10 புள்ளிகள் |
| (இ) | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்சார் தகைமைக்காக (அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.) | 05 புள்ளிகள் |

2. **கல்வித் தகைமைகள் :** ஆகக்கூடிய புள்ளிகள் 25

| | |
|---|---|
| கலாநிதிப் பட்டம் | 25 புள்ளிகள் |
| எம்.பில். பட்டம் | 20 புள்ளிகள் |
| பட்டப்பின் படிப்பு, எம்.எஸ்.சீ/எம்.ஏ | 18 புள்ளிகள் |

| | |
|---|---|
| பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 15 புள்ளிகள் |
| வகுப்புச் சித்தியுடன் கூடிய பட்டம் | 12 புள்ளிகள் |
| விசேட பட்டம் | 10 புள்ளிகள் |
| சாதாரண பட்டம் | 08 புள்ளிகள் |
| டிப்ளோமா | 05 புள்ளிகள் |

(ஆகக்கூடிய தகைமைக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கணக்கீட்டு அல்லது கணக்காய்வுத் துறையில் பூரணப்படுத்தி யிருப்பின் ஆகக்கூடிய தகைமைகளிற்கு மேலதிகமாக, மேலும் 02 புள்ளிகள் வழங்கப்படும்.

3. **அனுபவம்** : ஆகக்கூடிய புள்ளிகள் 40

(அ) வெளிவாரி விண்ணப்பதாரர்களிற்குரிய அடிப்படைத் தகைமையினை பூர்த்திசெய்த பின்னர் எழுகின்ற 08 ஆண்டுகள் சேவை காலத்தின் பின்னரான ஒவ்வோர் ஆண்டிற்கும் 05 புள்ளிகள் வீதம்

(அ) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபன சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அடிப்படைத் தகைமையினை பூர்த்திசெய்த பின்னர் எழுகின்ற 04 ஆண்டுகள் சேவைக் காலத்தின் பின்னரான ஒவ்வோர் ஆண்டிற்கும் 05 புள்ளிகள் வீதம்

(இ) கணக்காய்வுச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களது அடிப்படைத் தகைமையினை பூர்த்திசெய்த பின்னர் எழுகின்ற ஒவ்வோர் ஆண்டிற்கும் 05 புள்ளிகள் வீதம்

(ஈ) யாரேனுமோர் விண்ணப்பதாரருக்கு அவர் கணக்காய் வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தில் இலங்கைக் கணக்காய்வு சேவையின் உத்தியோகத்தராக பூரணப் படுத்திய ஆண்டொன்றிற்கு 04 புள்ளிகள் வீதமும், கணக்காய்வு பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தராக பூரணப்படுத்திய ஆண்டொன்றிற்கு 02 புள்ளிகள் வீதமும் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், இரட்டைக் கணிப்பை தவிர்ப்பதற்காக விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஒத்த காலப்பகுதிக்காக (ஈ) பந்தியின் கீழுள்ள இரண்டு முறைகளிலும் புள்ளிகள் வழங்கப்படுதல் கூடாது.

4. **நேர்முகப் பரீட்சைக்கு** : ஆகக்கூடிய புள்ளிகள் 10

(விசேட தகைமைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய திறமை களிற்காக புள்ளிகள் வழங்கப்படும்)

**கவனிக்க.**- புள்ளிகள் வழங்கப்படுகையில் கருத்திற் கொள்ளப்படுகின்ற தகைமைகள் / திறமைகள் நேர்முகப் பரீட்சை பட்டோலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9-876

**புத்தசாசன அமைச்சு**

பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பௌத்த கலைக்களஞ்சியத்தின் பிரதம எழுத்தாளர் பதவி, பிரதி எழுத்தாளர் பதவி மற்றும் உதவி எழுத்தாளர் பதவி

பௌத்த கலைக்களஞ்சியத்தின் பிரதம எழுத்தாளர் பதவி, பிரதி எழுத்தாளர் பதவி மற்றும் உதவி எழுத்தாளர் பதவி என்னும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு நியமிப்பதன் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து 2016.10.23 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக ''செயலாளர், புத்தசாசன அமைச்சு ''தஹம்பாய'', இல. 135, ஸ்ரீமத் அநகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 07'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமோ அல்லது அதனுடன் தொடர்புடையதான ஏதேனும் கடிதங்களோ தபாலில் தொலைந்தாகவோ அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமை தொடர்பாகவோ தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**(01) பௌத்த கலைக்களஞ்சியத்தின் பிரதம எழுத்தாளர் பதவி**

1. இப்பதவியானது தற்காலிகமானது. நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது நிரந்தர நியமனத்தை உடைய அதிகாரி ஒருவருக்கு கிடைக்கப்பெறும் சலுகைகள் வழங்கப்படாத இரண்டு (02) வருட கால எல்லையைக் கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான ஒரு பதவியாகும்.

2. **சம்பள விபரம்**.- முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் அனுமதிக்கமைய இப்பதவிக்குரிய சம்பளம் கீழுள்ளவாறாகும் :-

2016 - அடிப்படை மாதாந்தச் சம்பளம் - 44,639 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 9,467 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

2017 - அடிப்படை மாதாந்தச் சம்பளம் - 54,021 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 1,345 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

3. **வயதெல்லை**.- 35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடிய வயதெல்லை விதியானது உரித்தாவதில்லை.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகமொன்றில் பாளி, பௌத்த கலாசாரம் தொடர்பாக 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பு விசேட பட்ட மொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அத்துறையில் கலாநிதி அல்லது பீடாதிபதிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) நூற்பதிப்பக அலுவலகமொன்றில் அல்லது அதனுடன் தொடர்புடையதான அலுவலக மொன்றில் 10 வருட அனுபவத்தைப்பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) ஆங்கில மொழியில் பூரண நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **சேவை விதிமுறைகள்**.- தாபனக் கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 10 ஆம் மற்றும் 12 ஆம் பந்திகளில் கூறப்பட்டுள்ளவை.

6. இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் பதவிக்குரிய கடமைகள் தொடர்பாக பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்துடன் சேவை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

**(02) பௌத்த கலைக்களஞ்சியத்தின் பிரதி எழுத்தாளர் பதவி**

1. இப்பதவியானது தற்காலிகமானது. நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது நிரந்தர நியமனத்தை உடைய அதிகாரி ஒருவருக்கு கிடைக்கப்பெறும் சலுகைகள் வழங்கப்படாத இரண்டு (02) வருட கால எல்லையைக் கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான ஒரு பதவியாகும்.

2. **சம்பள விபரம்**.- முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் அனுமதிக்கமைய இப்பதவிக்குரிய சம்பளம் கீழுள்ளவாறாகும் :-

2016 - அடிப்படை மாதாந்தச் சம்பளம் - 36,659 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 9,551 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

2017 - அடிப்படை மாதாந்தச் சம்பளம் - 44,269 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 2,889 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

3. **வயதெல்லை**.- 30 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடிய வயதெல்லை விதியானது உரித்தாவதில்லை.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகமொன்றில் பாளி,பௌத்த கலாசாரம் தொடர்பாக 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பு விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைகழகமொன்றில் முழுநேரப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) நூற்பதிப்பக அலுவலகமொன்றில் அல்லது அதனுடன் தொடர்புடையதான அலுவலகமொன்றில் 08 வருட அனுபவத்தைப்பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) ஆங்கில மொழியில் பூரண நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **சேவை விதிமுறைகள்**.- தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் மற்றும் 12 ஆம் பந்திகளில் கூறப்பட்டுள்ளவை.

6. இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் பதவிக்குரிய கடமைகள் தொடர்பாக பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்துடன் சேவை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

**(03) பௌத்த கலைக்களஞ்சியத்தின் உதவி எழுத்தாளர் பதவி**

1. இப்பதவியானது தற்காலிகமானது. நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது நிரந்தர நியமனத்தை உடைய அதிகாரி ஒருவருக்கு கிடைக்கப்பெறும் சலுகைகள் வழங்கப்படாத இரண்டு (02) வருட கால எல்லையைக் கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான ஒரு பதவியாகும்.

2. **சம்பள விபரம்**.- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கமைய இப்பதவிக்குரிய சம்பளம் கீழுள்ளவாறாகும்.

2016 - அடிப்படை மாதாந்தச் சம்பளம் - 27,871 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 9,651 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

2017 - அடிப்படைச் சம்பளம் - 33,728 ரூபா.
செம்மையாக்கல் கொடுப்பனவு - 4,568 ரூபா.
வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு - 7,800 ரூபா.

3. **வயதெல்லை**.- 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடிய வயதெல்லை விதியானது உரித்தாவதில்லை.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகமொன்றில் பாளி, பௌத்த கலாசாரம் தொடர்பாக 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பு விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அத்துறையில் கலாநிதி அல்லது பீடாதிபதிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஆங்கில மொழியில் பூரண நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

5. **சேவை விதிமுறைகள்**.- தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் மற்றும் 12 ஆம் பந்திகளில் கூறப்பட்டுள்ளவை.

6. இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் பதவிக்குரிய கடமைகள் தொடர்பாக பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்துடன் சேவை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

வசந்த ஏக்கநாயக்க,
செயலாளர்,
புத்தசாசன அமைச்சு.

9-946

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

### *சிங்களம்/தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்பிக்கும் ஆசிரியர் ஆவதற்காக அடிப்படைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு*

இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் பத்திர கற்கைநெறி - சிங்களம்/தமிழ்

சிங்களம்/ தமிழ் இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களாக பயிற்சி பெறுவதற்கு ஆர்வம் காட்டுகின்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து இந்த கற்கைநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்களம்/தமிழ் பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

2. வயது 28 இற்கு குறைவாக இருத்தல்.

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் இரண்டாம் மொழியில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

இரண்டாம் மொழியைக் கற்பித்தல் பற்றிய அடிப்படைப் பயிற்சியைப் பெற்றுத்தரும் இந்த சான்றிதழ் பத்திர கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் எமது நிறுவனத்தினால் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இரண்டாம் மொழியைக் கற்பித்தல் பற்றிய உயர் டிப்ளோமாவிற்கு பிரவேசிப்பதற்கான தகைமையாகும்.

மேலும் இந்தப் பாடநெறியைப் பூர்த்திசெய்த பின்னர் கற்பிக்கும் ஆற்றலின் அடிப்படையில் இந்த நிறுவனத்தின் மொழி மூல வகுப்புக்களின் தற்காலிக மொழி மூல ஆசிரியராக கற்பிப்பதற்கு வாய்ப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு மொழி மூலத்தில் பயிற்சிக் கற்கை நெறிக்காக அனுமதிக்கக்கூடிய அதிகூடிய எண்ணிக்கை 60 பேராகும். ஒரு மொழி மூலம் 2 கற்கைநெறிகளை இந்த வருடத்தில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தேவைப்படுமளவிற்குமேல் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை ஒன்று நடத்தப்படும். இந்த வருடத்தில் அனுமதிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காத தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் அடுத்த வருடத்தில் கற்கைநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

சான்றிதழ் பத்திர கற்கைநெறி கொழும்பில் நடத்தப்படுவதுடன் இக்கற்கைநெறியானது 120 மணித்தியாலங்களை உள்ளடக்கியதாக அமையும். அத்தோடு 2 மாதங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பயிற்சிக் காலத்தில் விடுதி வசதிகள் கலந்து கொள்வோரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். கற்கைநெறி நடத்தப்படும் நாட்களில் பகல் உணவு மற்றும் தேநீர் என்பன நிறுவனத்தினால் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2016.09.30.

உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தை (கல்வி மற்றும் ஏனைய தகைமைகளுடனான சான்றிதழ்களின் பிரதியுடன்) கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் பத்திர கற்கைநெறி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.

இல. 40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய.
தொலைபேசி இல. : 011-3092903, 011-3092912, 034-3944352.

9-951

---

## நீதி அமைச்சு

### தொழில் நியாய சபை பேச்சு மொழிபெயர்ப்பாளர் சேவையின் III ஆம் தரத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

தொழில் நியாய சபைகள் அலுவலங்களில் பேச்சு மொழிபெயர்ப்பாளர் சேவையின் III ஆம் தரத்தின் (சிங்களம்/ தமிழ்) 3 பதவிகளுக்காக மற்றும் (சிங்களம்/ ஆங்கிலம்) 4 பதவிகளுக்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் நியாய சபைகள் அலுவலகங்களில் பேச்சு மொழிபெயர்ப்பாளர் சேவையின் III ஆம் தரத்தின் (சிங்களம்/ தமிழ்), (சிங்களம்/ ஆங்கிலம்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி - 2016.10.21.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

*1.* **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**- நீதி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்று மற்றும் தொழிற் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் மீது தெரிவுசெய்யப்படுவர்.

*2.* **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் 3 வருட தகுதிகாண் காலமொன்றுக்கு உட்படுவதுடன் அந்த 3 வருட காலத்துள் முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். பதவிக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் ஆண்டொன்றுக்கு இரு தடவைகள் நீதி அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவன மொன்றின் மூலம் நடாத்தப்படும்.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின்படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்களால் 3 வருட காலத்துள் அரச கரும மொழியொன்று பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரசகரும மொழிபற்றிய தேர்ச்சி 5 வருடத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

*3.* **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி MN-1-2016 ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45, 540 ஆகிய (மாதாந்த) சம்பள அளவுத்திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறைக்கு சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள படிநிலை 27,140 ரூபாவாகும். அச்சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையின்படி சம்பளம் செலுத்தப்படும்.

*4.* **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள் :**

- கல்விப் பொதுத்தராதரப் (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் பேச்சு மொழிபெயர்ப்புச் சம்பந்தப்பட்ட இரு மொழிகள் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும்
- கல்விப் பொதுத் தராதரப் (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (1) பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில் தகைமைகள்.**- ஏற்புடையதாகாது ;

(iii) **அனுபவம்.**- ஏற்புடையதாகாது.

*5.* **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*6.* **உடல் தகைமைகள்.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

*7.* **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கமுடையவ ராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவை யான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அத்தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

*8.* **எழுத்துப் பரீட்சைகளில் புள்ளிகள் வழங்கும் முறை :**

| *பாடங்கள்* | *உயரிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| சிங்களம்/ தமிழ் அல்லது சிங்களம்/ ஆங்கிலம் பேச்சு மொழிபெயர்ப்பு | 100 | 40% |

*9.* **தொழிற் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை :**

| *பாடங்கள்* | *உயரிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|
| சிங்களம்/ தமிழ் அல்லது சிங்களம்/ ஆங்கிலம் பேச்சு மொழிபெயர்ப்பு | 100 | 40% |

அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்ப தாரர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படு

வதுடன், எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் இருமடங்கு தொழிற் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழிற் பரீட்சையின்போது வாய்மூலம் மொழியை மொழிபெயர்ப்புச் செய்யும் ஆற்றல் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

10. **பொது நேர்முகப் பரீட்சை.**- நீதி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபை யொன்றினால் தொழிற் பரீட்சை நடாத்தப்படும் தினத்திலேயே அடிப்படைத் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள்.**- ஒவ்வொரு நியமனமும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படும்.

12. **பரீட்சைக் கட்டணங்கள்.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் 300 ரூபாவாகிய பரீட்சைக் கட்டணமொன்று மக்கள் வங்கி, நகர மத்திய கிளையில் உள்ள 176-1-001-9-9025184 ஆம் இலக்க நீதி அமைச்சின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணத்தைக் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

13. விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசிகளில் தயார் செய்யப்பட வேண்டுமென்பதுடன், 1 தொடக்கம் 12 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் இறுதி வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்த வேண்டும். சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப் பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு இயைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும், அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக தயார் செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

**கவனிக்க :**

(i) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப் பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது ;

(ii) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

14. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தொழில் நியாய சபை பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகின்றன.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

2016, ஒகத்து 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

தொழில் நியாயசபை பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவி

| | |
|---|---|
| சிங்களம்/ தமிழ் | |
| சிங்களம்/ ஆங்கிலம் | |

இல. :.............................
(அலுவலக உபயோகத்துக்கு)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/ பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

11. க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

சுட்டெண் :----.
பரீட்சையில் தோற்றிய ஆண்டு :----.
சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழிக்கான சித்தி :----.
கணிதத்திற்கான சித்தி :

பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................

12. க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
சுட்டெண் :----.
பரீட்சையில் தோற்றிய ஆண்டு :----.

பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................
பாடம் .............................. தரம் ................

13. பிற தகைமைகள் :

(i) ----.
(ii) ----.

14. மொழித் தேர்ச்சி (ஏற்புடையதான கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.) :

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

விண்ணப்பதாரரின் உறுதியுரை :

................................................ ஆகிய நான், இதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை எனத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ அல்லது வினைத்திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும், பதவியைக் கைவிட்டுச் சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................... ........... ஆந் திகதி தொடக்கம் ............................ நிறுவனத்தில் ................................. ....... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய உத்தியோகத்தர் ஒருவராக சேவை செய்கின்றார் எனவும், அவரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவர் இதற்காகத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பெற்றுள்ளார் எனவும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக இலச்சினையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

9-886

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.